உ

ஸ்ரீ கிருஷ்ணசகாயம்

# ருக்குமாங்கதர் சரித்திரம்.

## விருத்தமும் கீர்த்தனைகளும்

இஃது

கும்பகோணம் கரமாக்ஷிஜோசிய அக்கிரகாரம்

**112**-ம் நெம்பர் கதவுலெக்கமுள்ள வீட்டிலிருக்கும்

ம-ா-ா-ஸ்ரீ

கல்யாணராமய்யர் அவர்களுடைய குமாரத்தி

**விசாலாட்சி அம்மாளவர்களால்**

இயற்றப்பட்டு

கும்கோணம் "லார்ட் ரிப்பன் அச்சாபீசில்"

பதிப்பிககப்பட்டது.

☞ இந்தசரித்திரம் வாசிப்பவர்கள் பின்புறம்அச்சிட்டிருக்கும் பிழைதிருத்தங்களைப் பார்த்துக்கொண்டு வாசிக்கவும்.

# பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| க. | சு. | வல்லன | வல்லவன். |
| ,, | சு. | நாரகிய | நாரதிய |
| ,, | ௰௪ | கொண்டரர் | கொண்டார். |
| உ. | க. | உபவாசத்தால் | உஸ்வாசத்தால் |
| ,, | ௰எ. | வளப்பெருமை | வனப்பெருமை. |
| ரு. | க. | விராத்தாக | வார்த்தாக. |
| ,, | அ. | னீந்தக்கால் | னீந்தாக்கால். |
| ,, | ௰ரு. | ராத்திரி | ராத்ரி. |
| ,, | ௰௪ | மத்தநாள் | மத்தாநாள். |
| ௪. | ரு. | தேவர்பாதம் | தேவர்பற்றிபாதம். |
| ,, | ௰சு. | விப்பிறரோடும் | விப்பிரரோடும். |
| ௬. | ௰௬. | போகத்தில் | லோகத்தில். |
| ௯. | உ. | விதமுய் | விதமும். |
| கக. | ௰௪. | போரோ | பேரோ. |
| ௰உ. | அ. | எண்டாசனிப்போ | எண்டரசனிப்போ. |
| ,, | சு. | மேட்டியை | மேட்டுமே. |
| ௰ரு. | ௬. | இப்போ | இட்டபேர். |
| ,, | அ. | னென்றுஅறிவாய் | னென்றறிவாய். |
| ,, | ௰எ. | மண்னன் | மன்னன். |
| ௰௪. | ரு. | (அவன்) | (அவன். |
| ,, | அ. | விளக்குள் | விளக்குகள். |
| ௰௬. | கக. | மிங்கே | மென்றுன். |
| ,, | ௰௬. | விகிக்வேணும் | வகிக்கவேணும். |
| ௰சு | ௰உ. | உறைஎன்ற | உறசுட்ன். |
| ,, | ௰சு | அந்தவமாய் | அந்தமாய். |

உ

ஸ்ரீராமஜெயம்.

# ருக்குமாங்கதர் சரித்திரம்.

விருத்தம்

கருத்துடன் குருவைப்போற்றி கரிமுகன் தனையும்போற்றி
நிருத்தினேன் வாணிபாதம் நெஞ்சினில் நேசத்தோடு
உறைத்திட ஹரிவாசறத்தின் உண்மையை யறிந்து இப்போ
வருத்தமுமன்றிச்சொல்ல வந்தெனக்கருள் செய்வீரே. க

விருத்தம்-உ

நல்தோர் சூதர்தன்னை நைமிசிரிஷிகள் பார்த்து
வல்லவனருக்குமாங்கதன் வகித்தரி வாசறத்தால்
எல்லையை யளந்தார் பாதம் ஏறினு னென்றுகேட்டோம்
சொல்லவும் வேணுமென்று சிரசினல்வணங்கிக்கேட்டார்.

விருத்தம்-ங

நாரதிய மென்றதோர் நலமுடன் புராணந்தன்னில்
கூறியே யிருக்குதய்யா கூசாமலுறைப்பேனிப்போ
காரியமெல்லாம் கேட்டால் கடுகி அரிபக்தியுண்டாம்
சேருவார் வைகுந்தமென்று செப்பினர்முனிகளதை ஒப்பினரே.

கீர்த்தனம்-க ராகம்-மோகனம் தாளம் சாபு.

என்னென்றுறைப்பேனய்யா ருக்குமாங்கதன்
பண்ணின விருதத்தை மெய்யா

மன்னர் மன்னர்கள்போற்ற மணிமுடிதரித்தவன்
பண்ணி ஹரிவிருதத்தை பறமபதமடைந்தான் (என்னெ)

அசுரர் அமரர் சேர்ந்து அமுதம் கடையும்போது
அஸ்வம் முதலுண்டாக அமரர் பகிர்ந்துகொண்டார்

உபவாசத்தால்விஷ மோங்கிவெளியில்வா
நிசமிறையாய் தேவர் நிலத்தில் விழவேகண்டு
தக்ஷணமருமகன் தன்னைநினைந்து பக்ஷிவாகனன் றெக்ஷித்திடு
மெங்க
அக்ஷணந்தன்னில் விஷத்தை புஜித்தவர் குக்ஷியும் வெளிறெண்
டையும் ரெக்ஷித்தார் (என்)
நீங்கள் விஷம்புஜிக்க நேர்ந்திடும் நாளைக்கி
பாங்குடன் ஹரிவாசரமென்று பகிர்ந்திடும்
தூங்காமலுங்காமல் துணிந்து விருதம்செய்வோர்கள்
வாங்காமல் என் லோகம் வந்துவசிக்கவேண்டும் (என்று)
ஹரியும் கேழ்க்கவே ஹரனும் ஓமென்றார் அறிந்துதேவர்கள்
அப்போ முதல்கொண்டார் தெரிந்துலோகத்து ஜனங்களிதை
கொண்டார் திறமையுள்ள ருக்குமாங்தன்கொண்டார் (என்னெ)

---

### விருத்தம்-ச.

மாளவதேசமாண்ட மகிபதி ருக்குமாங்கதன்
ஆளுகைக்குள் தேசத்தில் அருமலர் தோட்டம்வைத்து
நாளையும் கழித்திருந்தான் நல்லசுதன் மனைவியோடு
கேளுநான் உரைப்பேனென்று கிளம்பினர் முனியும்
அப்போ விளம்பினரோ.

### விருத்தம்-ரு

இந்தமனிடமொரு நாள்வந்திடவே நாரதரை வந்தனங்கள்
செய்துநின்று
நந்தன வளப்பெருமை மிகுந்தவனு முறைக்கவே உகந்துமுனி
அவனைபார்த்து
அந்தருக்குமாங்கதன் நந்தவனபெருமையைஅடிக்கடியவருங்கூற
இந்திரனும் தேவர்களை இந்தக்ஷணம் புவிசென்று முந்திமலர்
கொணர்ந்திடுமென்றான்.

### விருத்தம்-சூ

அருந்தவ முனியேகேளும் அமரேந்திரன் ஏவலாலே
தெரியாமல் தேவர்வந்து தினமும் மலர் கொய்துபோனர்

அரிந்ததோர் கண்வர்சொல்லால் அமைந்திட விரதத்தாக தூபம்
பறந்துமே தேர்செல்லாமல் பார்தன்னில் நின்ருர் தேவர்.

விருத்தம்-எ

வந்ததோர் தேவர்தன்னை வணங்கியே அரசன்கண்டு
நந்தன வனத்தில்லாத நல்மலர் இதுவோ அய்யா
எந்தனை பொருட்டா எண்ணி இந்திரன் வரவிட்டாரோ—அவர்
சிந்தையும் மகிழத்தானே சீக்கிரம் கொண்டுசெல்வீர்.

---

கீர்த்தனம்-உ-கல்யாணி-ஆதி

பூபதியேகேளும் போகாதெங்களுட புண்ணியவிமானம்
ஸ்ரீபதி ஹரிவிரதம் செய்தபலனீந்தக்கால் செல்லுமிப்போ
பாரென்ருர் ( )

ஹரிவாசரமென்று அறிந்ததில்லை நாங்கள் யாருமிருந்ததில்லை
தெரிந்திட வுரைத்திடும்தேடியழைத்துவந்து செல்லும்படிக்கிச்
செய்கிறேன்
பத்தினியிடத்திலே நித்தியம் வேலைசெய்யவே, வைத்ததாதி
ஒருத்தி,
புத்திரன் பர்த்தாவோடு மெத்தகோபத்தினல் சுத்தஉபாசமிருந்
தாள் ( )

நித்திரையும்வாராமல் நினைந்து ஹரியை யவள் சுத்திராத்திரி
கழித்தாள்,
மத்தநாள் துவாதெசி காலவேளைதன்னிலே, சுத்தஅன்னத்தை
புஜித்தாள் ( )

உத்தமவிருதத்தின் பலனையடைந்திருக்காள்ஒருத்தி உந்தனூரில்
சித்தமிரங்கி நீரும் சீக்கிறம் பலம் தந்து செல்லவேஅனுப்புமென்
ருர்
அந்தக்ஷணம் அவளால்தந்திட பலம்செய்தான் உகந்து தேவரும்
சென்ருர்
வந்தனம்செய்து ராஜன் இந்த விருதமகிமை எந்தனக்குறையு
மென்ருன்

நாங்களறியோம் எங்கள் நாதனிடத்திற்சென்று நாடியே யுரைப்
போமென்றார்
நீங்களறியவே உறைத்திடும்படிக்கு நேமித்துவிடுவாரென்றார் ( )

சத்துக்குள்இந்திரனிடம்வைத்து மலனாதேவர்பாதம்பணிந்தார்
இத்தனை நேரமென்ன என்றிட அவடத்தில் நடந்ததெல்லாம்
மொழிந்தார் ( )

பக்கத்திலிருக்கின்ற அக்கினிபிரபவறை சீக்கிறம்புவியிற் சென்று
தக்கபடி விருதத்தை ருக்மாங்கதனுக்கு முக்கியம் உறையுமென்
றான் ( )

இந்திரன் ஏவலால் வந்தவேதியர் தன்னை வந்தனம் செய்துநின்று
சந்தேகம்தீறவே இந்தவிருதவிதியை எந்தனுக்குறையுமென்றான்

---

விருத்தம்-அ

அரசனே சொல்லக்கேளாய் அரிவாசற விதியுரைப்பேன்
பரிஜனத்துடனே கூடி பரிந்துநீ யிருந்தாயானால்
தெரிசனம் தருவார்வந்து சீக்கிறம் ஹரிநேருக
மருபடி பிறந்திடாமல் வைகுந்தம்சேருவா என்றார்.

சூரளிகை-ஆறபீ-தேவகாபுரி

மன்னனே சொல்லக்கேளாய் மகத்தான விருதமகிமை
முன்னாளும் தெசமி யென்பார் முகுந்தனை நினைந்துகொண்டு
எண்ணமுதல் ஸ்ரீபோகத்தை எண்ணாமல் வெறுத்துத்தள்ளி
உண்ணாமல் மருதிறமும் ஒருவேளையாகவுண்டு
மத்தாநாள் யேகாதெசி மாதவர் தன்னைபோற்றி
நித்திரை யாகாரம்விட்டு நேமமாய் இருந்து நீயும்
உத்தமதுவாதெசியில் உகந்து மேவிப்பிறரேடும்
சுத்தமாய் அன்னமுண்டு செய்தி நீ வருவாயானால்
பத்தாது செய்தபாபம் பறந்துமே போகுங்கண்டாய்
முத்தியும் அடைவாயென்று மொழிந்துமே முனியும்சென்றார்

அரசனும் கேட்டுகந்து ஆளுகைக்குள் தேசத்தில்
வயது எண்பதுக்கு மேலாய் வாய்த்த அஞ்சுக்கும் கிழாய்
ஈருயிர்க் காரி ரோகி இவர்களைத்தவிர வேறே
ஆராகிலன்னமுண்டால் அவருயிர் பரிப்போமென்று
கூருங்கோள் மந்திரியென்று கூசாமல் அரசன் சொல்ல
தெரிந்திட தெண்டோரவால் ஜகத்தினில் பிரசித்தம் செய்து
நாரணன் விருதங்களாலே நாளையும் கழித்திருந்தான்
சிருடனெமபுறத்தை சோரதேஜனங்களெல்லாம் நேரவே
வைகுந்தந்தன்னை நேர்மையாய் அடைந்தாரய்யா

---

விருத்தம்-கூ

காலனோடு சபைக்கொருக்கால் கடுகிநாரதரும் வந்தார்
வேலைகளத்துக்காலன் விளங்கிடா சித்திறகுத்தன்
ஓலமில்லா நரகம் ஊருபாழாகக்கண்டு—(சூரிய)
பாலனைப்பார்த்து மப்போ பகருவா யென்றுகேட்டான்.

---

கீர்த்தனம்-௭-கேதாறம்-ஆதி

நாரதரே கேளும் பாரில் ருக்மாங்கதர் பண்ணின ஹரிவிருதத் தால்
சோரவே ஜனங்களை நாரணன் போகத்தில் நேராக அனுப்பி வைத்தார் ( )
காரியமத்து நான் கணக்கனும் வேலையத்து ஆயுதம்துருப்பிடித்து
வீரியமத்தே நான் நால்முகனிடத்திலே வேகமாய்ச் செல்வோம் வாரும் ( )
உத்தம நாரதரோடு சத்தியிலோகம் வந்துபக்த்தியோடு துதித்து நின்றார்
சித்தமிறங்கி நால்முகரும் அந்தவேளையியில் பிறத்திகூமாக வந்தார் ( )
கண்டவுடன் காலன் புண்டரீக பாதத்தில் தெண்டமென்றே பணித்தான்

இன்றை முதலதிகாரம் வேண்டாம் நேக்கு தெண்டம் கைகொ
ள்ளுமென்றான் ( )
என்னகாரணத்தினால் என்னோடுலகம் வந்து கின்னமா யுரைத்தா
யிப்போ
சொன்னால் தெரியும் நேக்கு சீக்கிறமாகமே சொல்லுவா காலா
என்றார் ( )
வீரவைஷ்ணவனும்ருக்மாங்கதன் ஜனங்களை விருதத்தாலே கரை
எத்தினான்
கோற நரகங்கள் வேருடன் பாழ்த்தது கூரினேன் கேளுமென்
றான் ( )
வேறேவழி எனக்கு கூறிடாமல் போனால் வேலைகள் வேண்டா
மென்றான்
நாரணன் பக்த்தனை நானென்ன செய்யலாம் சீராதே போவா
யென்றார் ( )
உத்தம கெயையிலே வைத்த பிண்டத்தால் பிதிர் திர்ப்தி யடை
ந்தாப்போல
சத்திய விருதத்தை சத்தில் கெடுத்தாலெந்தன் சித்தம் மகிழு
மென்றான் ( )
கன்னிநீல கோதானம்பண்ணும் குலபிதிர்க்கள் புண்ணியலோகம்
சென்றாப்போல்
உன்னித விருதத்தை சின்னப்படுத்தினால் நீ யென்மனம் மகிழு
மென்றான் ( )
என்ன சொன்னாலும் காலா பன்னக சயனரோடுன்னித விருதம்
செய்வோனை ( )
என்னாலென்ன செய்யக்கூடு மென்றெண்ணுறாய் பின்னேயோசி
ப்போம் செல்லென்றார் ( )

---

விருத்தம்-ய

சொல்லியே காலன் தன்னை சீக்கிறம் அனுப்பி வைத்து
வல்லவன் ருக்மாங்கதன் மகிமையை குறைக்கவேண்டி
மெல்லியர் தன்னை யுண்டாக்கி மோகிக்கச்செய்வோமென்று
வல்லமை யெல்லாம் காட்டி வகித்திட்டார் மாதை எதிரழை
திட்டாரே

## விருத்தம்-௧௧

வந்ததோர் பெண்ணைக்கண்டு மயங்கியே வேதனின்று
தந்தையோடு பாதம் போற்றி தையலு மெதிரே நின்று
எந்தனுக்கு பேரு மென்ன யேது நான் செய்யும் வேலை
சிந்தையு மறியத்தானே செப்புவீ ரென்று கேட்டாள்

## கீர்த்தனம்-௫ தன்னியாசி-ராகம் ஆதி-தாளம்

ஏதுக்கெந்தனை சிருஷ்டி செய்திட்டீர் ஆதரவுடன் வாணி நாதா
இந்த வேளையில் (ஏது)
மங்கையற்கு மங்கையர் மோகிக்க தேவர்அங்கபாரத்தைக் கண்டு
யூகிக்க
செங்கையில் வீணையோடு மங்கைப்பருவமாக (ஏது)
சங்கரன் தன்மனம் மோகிக்கவோ அந்த கெங்காஜனகனை
வகிக்கவோ
பொங்கி அமரேசனுடைங்கம் புளகிக்கவோ (ஏது)
வேதியர்கர்மம் வீணாய் போக்கவோ அந்தமாதவம் செய்வோரைக்
கெடுக்கவோ
போத முடையோர் மனம் பேதிக்கவே செய்யவோ ஏது
நாரதர் முதலோரை வாட்டவோ இந்த பாரில் அரசர்களைக்
கூட்டவோ
சூறன் தலைகொய்தோரை நேருகவே காட்டவோ ஏது
ஓதிகருத்துரைத்தால் உய்யுவேன் யாரையும் பேதிக்கவே மனம்
செய்குவேன்
பேதை என்றென்ன வேண்டாம்நாதா திராணியைப்பாரும் ஏது

## விருத்தம்-௧௨

இந்த விதம் மாது சொல்ல சிந்தையும் தெளிந்து வேதன்
சுந்தரி மோகினியே என்று செப்பினேம் பேரும் நோக்கு
மந்திரா சலத்தில்ச்சென்று வருகின்ற அரசன் தன்னை
உந்தனோடு வசமாய்ச்செய்து உகந்திங்கே வருவாயென்றார்

---

கீர்த்தனம்-சுபுன்னாகவாளி சாபு-தாளம்

என்னென்றுறைத்தீரய்யா மந்திராசலம் எகுவேனோ ஒண்டியாய
மன்னவன் தன்னுட வடிவுகளுறையாமல் இன்ன காறிய மென்று
என்னுடன் கூறாமல் எந்தனை ஒண்டியாய்
போவென்றவடத்தில் சொன்னது இதுஎன்ன ஞாயமோ என்
பூமியில் அரச னொத்தன் ருக்மாங்கதன் பேரில் மிக பிரசித்தன்
ஸ்வாமிஹரிவிருதத்தால்ஜனங்களைத்தானேவைகுந்தம்சேர்த்தான்
காமத்தாலுந்த னிடத்தில் வருவான் நேமத்துடன் செய்யும் விரு
தத்தை கெடுத்திடு என்
மாதே மந்திராசலத்தில் சென்றுநீயும் வசித்திருப்பா இப்போது
மாறன் வசந்தன் தன்னை உன்பின்னே சேரவே அனுப்பிவைப்
பேன்
சீருடன் வீணைகொண்டு ஸ்ரீங்காரம்மாய்சொல்லி பதங்கள் விண்டு
மாரிடா பூமலர்கள் சொரிந்திடும் கூறியே கோகிலங்கள் மொழிந்
திடும் (மாதே)
இணங்கிட வருகும்போது என்சொல்லை கேளுமென்றுறை
அப்போது
அணங்கன் கணைதாளாமலே உந்தனுக்கு அடித்திடுவான் கை
மேலே
மயங்கச்செய்து நீ விருதத்தில் புஜிக்காட்டால் மைந்தன்சிரசை
யும் வாங்கிவா இங்கே (மாதே)

---

விருத்தம்-௰௩

வேதனும்அனுப்பிவைக்க வேகமாய்புவில் வந்தாள்
மாதவம் செய்வோரெல்லாம் மயங்கியே பின்றுடர்ந்தார்
போதமில்லாதஜந்து புலி பசு பக்ஷிஜாதி
கோதிடும் இறையைவிட்டு கூடவே சென்றுதப்போ.

கீர்த்தனம்-எ-மோகனம்-ஆதி

சுந்தரிமோகினி வந்தாளே விந்தையாகவே சுந்தரிமோகினி வந்தாளே
சுந்தரிமோகினி வந்தாள் மந்தறகிரியை நாடி எந்தவிதமுய் ருக்குமாங்கத ராஜனை
சிந்தை கலங்கிட செய்குவே நானென்று சுந்தரி
தாமறையிதழ் நயனமும் தாங்கியே மேலே காமன்வில்போலே புருவமும்
சோமனை யழிக்கும்முகமும் செங்கமலத்தை சேர்ந்துநகைத்திடும் கறமும்
முல்லைமலர்போல் பல்லும் எள்ளுபூபோல் நாசியும் நல்லபவழம் போலே மெல்லிய அதறத்தோடு சுந்தரி
சங்கம்போல் கழுத்துசிருத்து தங்ககுடம்போல் ஸ்தனங்ளதின் கீழேபெருத்து
தொங்கும் மாலைபோலே கறத்தில் திவியரெத்தனத்தால் வங்கியோடு
கங்கணம் தரித்து கத்திப்புடிஇடையும் மத்தகெஜநடையும் சுத்தி பார்ப்போர் மனம் பத்தி யிழுக்கும்படி சுந்தரி
வீணையிலிசைகள் கூட்டி நாலெட்டுருகம் விண்ணணத்தோடு மூர்ச்சைகாட்டி.
ஆணுவத்தோடு வார்த்தையுறைத்து ஆரையும் கண்ணால் பாரே னென்று கெருவம்வகித்து
பானுமதி யிந்திரன் பார்த்ததேவர்கள்வாட நாணிரொம்பை ஊர்வசிநயந்து மிககொண்டாட சுந்தரி

---

விருத்தம்-யச-

மந்திரா சலந்தன்னிலே வந்ததொருமோகினியும் உகந்துலதா கிறகமிருந்தாள்
அந்தருக்குமாங்கதன் நகர்தனை அழிக்க மிருகம் அமைத்துவிட்டார் வேதனப்போ

வந்துறைக்க காட்டார்கள் சினந்துமிககோபித்து மைந்தனிட்ம்
ஆசுவைத்து
பிந்திவற வேட்டையர்கள் பொருந்திடவேசெந்நாய்கள் பெரு
வனத்திலரசன் வந்தான்

---

கீர்த்தனம்-அ-நாதநாமகிரி-ராகம்-ஆதி

ீவேட்டையாடினுனேராஜன் விந்தையாகவே வேட்டயாடினுனே
வேட்டையாடினுனே ராஜன் விந்தைவிந்தையாய் மிருகத்தை
காட்டுக்குள் நுழைந்துநாணைபூட்டியே வில்லைவளைத்து(வேட்டை)
கட்டியேவலைகள் நாட்டி கலைத்து மிருகம்ஒன்ருய் கூட்டி
தட்டிப்பறையறைந்து தகைந்து நால்புறத்திலும் வளைத்து விட்டு
ஓடாமல்
ஒட்டி உசிப்பிநாயை இருபுறத்திலும் வைத்து மரித்து பிடிக்கும்
போது
துள்ளியொருமானும் ஓட துடர்ந்து ராஜன் பின்னே கூட தள்ளி
மந்தறகிரிநாட தளர்ந்தறசநோர் மாத்தடிவாட (வேட்டை)

---

விருத்தம்-டு

இருந்தமோகினியும் ராஜன் யேகியேவருகாத்தாலே
பரிந்துமே மாரன் செய்யும் பலவிததுன்பத்தாலே
வரிந்திடா மதியோடுகூட வசந்த கோகிலமும்சேர
கறைந்துமேஅழுதுமாதுகருகுவாள்அவனைநினைந்துருகுவாளே.

---

கீர்த்தனம்-கூ-கண்டராகம்-ஆதி

எப்படிவிறகம் சகிப்பேன் இந்தவேளையில் எப்படி
எப்படிசகிப்பேன் வேதன் சொல்படி ராஜன் வல்லையே
மைப்படிக்கண் மாதர் வேட்டைக்கொப்பிடாமல்ப் போனுரே-எ
மாறன் விடும்மலர்க்கணை சிறியேவருகுதிப்போ கோறவெய்யல்

போலேமதி நோகவந்தெரிக்கிறான் எப்படி
பண்ணின பாபத்தால் வேதன் எண்ணாமல் சிருஷ்ட்டித்து வைத்
தான்
பெண்ணாகப் பிறந்தவர்க்கு மன்னனில்லா சுகமுண்டோ எப்படி
ஓடியே அலைந்துசுத்தி தேடிமலர் கொய்யும்போது
நாடாளும் மன்னனொருவன் வாடிப்படுத்திட கண்டாள் எப்படி

---

விருத்தம்-யசு

பரித்தகை மலரைவைத்து பத்தியே உத்துப்பார்த்தாள்
தரித்தகை ஆழியானோ சடமதிதரித்தான் தானோ
பெருத்தபூ உலகத்தானோ பூமலருதித்தான் தானோ—என்னை
வருத்தமும் செய்யவேண்டி வந்தவனிவனே என்றாள்.

---

சாபு-கீர்த்தனம்-எதுகுலகாம்போதி

மாரன்போல் லொண்டியாய் வனத்தில்வந்தவ னிவனாரோ
சீருடன் ருக்குமாங்கத னென்றும் இவனுக்கும் பேரோ
உத்தமலெக்ஷணம் ஒன்றாகிலும் குறவு இல்லையே
சத்ததீபாதி பத்தியம்தான் அடைந்தான் வெகுதொல்லையே
பத்தினிகள் இவன்க்கு எத்தினை பேரோ அரியேனே
வைத்து ஆசை யென்மேலே விருதத்தில் புசிப்பானோ தானே
வேதன்முன் திராணி சொல்லி விருதத்தை கெடுப்பே னென்றேன்
தேவா
நீதிமானாகிலிவன் நிலைக்குமோ யென்சொல்லும்-ஆ-ஆ
கிட்டப்போனா லென்னை கட்டியணைத்திடுவானோ—வேதன்
இட்ட கட்டளைப்படி எனக்குரைத்தாலல்லோ போவேன்

---

விருத்தம்-யஎ

மாதுமிப்படியே நொந்து மலர்களால் நீர்தெளித்து
வேதனை நீங்கத்தானே வெகுஉபசாரம் செய்ய

போதமும் அடைய ராஜன் போய்தன் னிடத்திருந்து
ஆதரவுடனே கானம் அவனும் மோகிக்கச்செய்தாள்.

---

கீர்த்தனம்-௧௪-தன்னியாசி-ஆதி

தாளல்லைசிலா சாமிகோபாலா (தாளல்லே)
தாளல்லே சிலா சாமி கோபாலா வேலையில்சயனேனே
வேநதன் மோகிக்கச் செய்வாய் (தாளல்லே)
வடவதியை அடக்கும் மாதர்விறகமென்று அடவுடன் வேதம்
சொன்ன தரியீரோ நீரும் (தாள)
சிறியேமாறன்கணை கூருவாள்போலபாயுது சேறமலையமாருதம்
துடர்ந்துவிசுது (தாள)
மதியைகண்ணாலேகண்டு மலர்ந்துநீலோத்பலம்
கெதிஎண்டாசனிப்போ கிட்டவரச்செய்குவீர் (தாள)
மேட்டியையுள்ளகானம் கேட்டுஅரசனிப்போ
காட்டுக்குள்ளிது வென்னபூட்கமெண்டெண்ணினன் (தாள)

---

விருத்தம் ௧௮

உத்துமேகானம்கேட்டு ஓடியேமலையைப்பார்த்தான்
சத்தியேலதாகிறகத்தில் தோகையுமிருக்கக்கண்டான்
பத்தியேஎதிரேநின்று பாவையே நீயாரென்றான்—என்
சித்தமும்உருகச்செய்தாய் சேருவேனுன்னைஎன்றான்.

ஆதி கீர்த்தனம் ௧௫ கமாச இராகம்.

மாதேமனதினில்மையல்மிகக்கொண்டேன்மருவியணைந்திடென்னை
மாதே
ஆதாவுடன்காமவேதனைதீர்த்தணைந்து கோதிடகோவைக்கனிஇத
ள்தருவாய் மாதே

சிந்தை யிரங்கி நீயும் உகந்து வந்தெந்தனை சேரு யிப்போ சேரு
சேராவிட்டால்
இந்தக்ஷணம் என்னுயிர் அந்தகன் கைக்கொள்வான் பாரு நீ பாரு
சுந்தரியே உந்தன் தந்தைதாயாரு உந்தனுக்களித்த பேரை நீ கூறு
மாதே
கட்டியணைய வாரீர் கன்னி யென்றறியும் காணும் என்ன காணும்
இப்போ மோகினி வேதன் சிருஷ்டித்த பெண்யானும் கேளும்
யானும்
தொட்டுக்கரமடித்து சொன்னதைக் கேழ்ப்பீரானல் விட்டிடா
மலே உம்மை வேண்டி யணைந்திடுவேன்
ஆருகாணும் நீர் அகல நில்லும் அணைந்திடக் கூடா தென்னை
ஆருகாணும் நீர்
அருக்கன் குலத்துதித்த அரசனேனுனென்று அறிவாய் இப்போ
அறிவாய்
அருமையுடனேருக்குமாங்கதனென்று பேர் தெரிவாய் நீ தெரிவாய்
இக்குவலய மன்னர் முக்கியமாய்ப்பணியும் தக்க விசிதாப்புரம்
தானரசிருப்பது—மாதே
அன்னத்தைப்பழித்திடும் கன்னியே உந்தனோடு நடையும் நல்ல
நடையும்
மின்னலை ஜெயித்திடும் சின்னம் சிறுத்ததொரு யிடையும் உந்தன்
இடையும்
கன்னல் மொழியும் தேகசொர்ண ஒளியுமின்ன பண்ணிப்புதைத்
தால்போல உன்னிதஸ்தனங்கண்டு—மாதே
இந்திரன் சந்திரன் சூரிய எமாதியர்கள் அறிய இப்போ அறிய
உந்தனுறையை ஒருகாலும் தவரிடேன் குறியாய் நீ குறியாய்
சொந்த மனைவியனா சிந்தையிலேண்ணேன் எந்த உனா சொன்
னாலும் அன்னிதா பண்ணேன்—மாதே

---

விருத்தம்-௰௬

மண்ணையுமாண்டமன்னன் மருவிட ஆசை கொண்டு (ஒரு)
பெண்ணுட கைப்பிடித்து பூமி ஆகாசம் காண
என்னுட மனைவியர்கள் இருக்கும் சம்பத்துமெல்லாம்
உன்னுடவசமே என்று உறுதிகள் கூரி நின்றான்.

## விருத்தம்-உ௰

மன்னவனுரைக்கக் கேட்டு மணந்து காந்தருவமாக
உன்னித சுகம் புஜித்து உகந்து சில நாளும் பின்னே
தன்னுட நகரில் போக தானுமே தூதர் விட்டான் (அவள்)
பின்னயேசென்று மங்கைபோகினுள்புத்திரனெதிர்யேகினுனே

---

## கீர்த்தனம் ௰௩ ராகம்-மோகனம் தாளம்-சாபு.

தந்தை விட்ட தூதர் வந்தார்கள் ருருமாங்கதனிடத்தில் போய் விண்டார்கள்
சொந்ததாய் முதலோர்க்கு உறைத்திட்டான் அப்போ மந்திரி மாறை அழைத்திட்டான்
அரசன் வறவை அறியுங்கள் நகரை அலங்கரிக்கும்படி உறையுங்கள்
எங்கும் தோறணங்கள் கட்டுங்கள் இப்போ தங்கவிளக்குள் மாட்டுங்கள்
ஆனை பறி தேறை கட்டுங்கள் அறிய அடித்து பேரிமுதல் கொட்டுங்கள்
வேதியர் தன்னைபழையுங்கள் இப்போ வேதகோஷங்களைப் பொழியுங்கள்
பூரண கும்பத்தை தாங்குங்கள் நீங்கள் போய் அரசன் பேட்டி வாங்குங்கள்
சேனைகள்சூழ வெளிசென்றான் தந்தை தேரின்முன் வநது எதிர் நின்றான்
வாரியே கையிலெடுத்திட்டான் ராஜன் மார்போடே சேர்த்து அணைத்திட்டான்
பத்தி தந்தைபாதம்பணிந்திட்டான் அவன்பக்கத்திலொரு பெண்ணைக்கண்டிட்டான்
பத்தினியானதோர் இந்தப்பெண் எனக்குபெத்ததாயோவென்று கேட்டிட்டான்
அரசனும் சித்தமகிழ்ந்திட்டான் அவன் அரியவே அப்போஉரைத் திட்டான்

வேதன்சிருஷ்டித்த தோர்பெண்ணென்றான் இவளுக்கு மோகினி
என்றதோர் பேரொன்றான்
மந்ரகிரி தன்னில் கண்டிட்டேன் இவள்மேல் மையல் கொண்டு
மணம் செய்திட்டேன்
சொந்ததாய் போல நீ பார்த்திடு இவள் சிந்தை மகிழ நடந்திடு
புத்திரனோடு நகர் தன்னில் வந்தான் அப்போ பத்தி அரமனைக்
குள்சென்றான்

---

விருத்தம் ௫௮

மைந்தனைப்பார்த்து ராஜன் மாதுமோகினிக்கும் இப்போ
அந்தமாய் அன்னமிட்டு அரிவைக்கு அலங்கரித்து
எந்தனோடிடத்தில் தானே யேகி நீ அனுப்பி விட்டு
முந்திபோல் நகரந்தன்னை முழுதும் நீ காப்பாயென்றான்

விருத்தம் ௨௨

தந்தையோடுரையைக்கேட்டு தாயிட இடத்தில் வந்து
மந்தர கிரியில் தந்தை மணம் செய்த மங்கைகண்டாய் (இந்த)
சுந்தரிக்கன்னமிட்டு சீக்கிரமனுப்பு மிங்கே
மைந்தனுரைகேட்டுமாது மருகுவாள் மனதுமிகஉருகுவாளே

---

கீர்த்தனம் ௫௪ ராகம்-கோதாரகுளம் தாளம்-ஜம்ப

தர்மாங்கதா கூறினாய் உன் தந்தை தாக்ஷண்ணிய மில்லாமலே
மர்மத்தோடு மணம் செய்திட்டார் இவள்க்கு நான் மகிழ்ந்தன்ன
மிடுவேனோ தான் ௧
அரசனோடுரையை அம்மா அனைவர்களும் சிரசாகவகிக்வேணும்
உருசையுட னன்னமிட்டு இவளை நீ வரிசை யுடனனுப்பி
வைப்பாய் ௨
காட்டிலிந்த பெண் ஒருத்தியாய் இருப்பாளோர்தான் பூட்டக
மென்றெண்ணுறேன் யான்
வேட்டை விதியாய் விளைந்துதே அரசனிப்போ கூட்டிவந்தா
றென் செய்குவேன் ௩

தந்தை மனம் நொந்திடாமல் அன்னமிட்டு முந்தி நீ அனுப்பிவைப்பாய்
வந்த விதியனுபவிப்போம் எந்தாயேசிந்தைமிக நொந்திடாமல் ௬
தாதியறை நோக்கி நின்று தையலுக்கு ஸ்நானம் வஸ்திரங்கள் கொடுத்து
ஆதரவோடன்னமிட்டு அரசனிடம் அனுப்பி விடுமெண்டுரைத்தாள் ௭
மஞ்சனீராட்டி தாதி மாதுக்கப்போ வஸ்திரபூஷணங்கள் சாத்தி
இஞ்சிகரி தயிரோடன்ன மிட்டரச னிடந்தனிலே கொணர்ந்து விட்டாள் ௮

---

விருத்தம் உ௩

சுந்தரி மோகினிக்கேர்க்க சயனகிறகம் ஜோடித்து திவ்விய சப்பிற கூடமிருந்தான்
கெந்த புஷ்ப்ப தாம்பூலம் கின்னரிமுதல் வாத்தியம் கேளிகிற கத்தில் அமைத்து
அந்தமுடன் மாற சாஸ்திறமறிந்தமாதப்போதனேகவித லீலை காட்ட
மந்தஹாசத்துடன் மாதை மடிமீதில்வைத்து மாறன் வசமானரசன்

விருத்தம்–உ௪

அரசனிப்படி இருந்தான் அரிவாசரம் வந்துதப்போ
உறைஎன்ற தர்மாங்கதன் உறையினேட் படிக்கு மந்திரி
பரிஜனமறியவேண்டி பறையரைதானழைத்து
முறசுகள் கொண்டு நீங்கள் முறையுடன் அடியுமென்றான்

---

கீர்த்தனம் ௧௫ ராகம்–காம்போதி தாளம்–சாபு

மந்திரி மார்கள் சொல்ல வந்து பறையர்கள் நின்றார் (அப்போ
அந்தவமாய் பேரி அடித்து எல்லோருக்கும் விண்டார் க
இன்றைக்கு தெசமி யேகாதெசி நாளைக்கு என்றார் (யாரும்
உண்டிடாமல் உறங்காமல் இருமென்று விண்டார் உ

பூரணகெர்பணி பிறந்தபிள்ளை ரோகிகள் தவிற வேறே
யாராகி லன்னமுண்டால் அவருயிர் பரிப்போமென்றார் ௬
மங்கையர் மருவல் மங்களஸ்னானம் கூடாதென்றார் நீங்கள்
அங்கமுருகி ஹரிகீர்த்தனம் உறையுங்கோளென்றார் ௭
அரசனாகிலும் இந்த ஆக்கினை தப்பாதென்றார் தருமாங்கதன்
உறசுசெய்து இந்த ஊரைவிட்டோட்டுவான் என்றார் ௮
கூரியேபேரிசப்தம் நேருடன் ராஜனும் கேட்டான் அப்போ
சிறி மன்சத்தைவிட்டு அரியென்றுறைத்து வெளிப்பட்டான் ௯

---

விருத்தம் (உ௰௫)

அரசனும் போகும்போது அணைந்திட கிட்டவந்தாள்
ஸ்பரிசிக்கக்கூடாதென்னை தெசமி இன்றைக்கே என்றான்
சறசமும் செய்யும்போது தான்விருதமுண்டோவென்றாள்
அரிவாசறம் பேரிதே அல்லால் அருவையே கேளா என்றான்.

---

ஆதி-கீர்த்தனம்-௰௬-முகாரி-ராகம்

என்னசொன்னீர் மன்னா நீரும் இந்தவேளை பிரிந்திட
எப்படி மனம் துணிந்தீர் ராஜனே ௧
உன்னித வடிவில்லையோ ஒரு றெசம் தெரியில்லையோ
என்னகாரணத்தினாலே இப்போ எழுந்தீர் ௨
சூரியனுதயமாச்சோ தீபத்தின் ஒளிகள் போச்சோ
சீக்கிறம் எழுந்துபோறீர் சொல்லும் ராஜனே ௩
எட்டுபத்து விதம் நாமும் கட்டியணைந்து கலவி தொட்டுச்செய்
திடும்போதென்னை விட்டுவிட்டீரோ ௪
நாறியே கேள் மூன்றுதினம் சேறவே யிருபேருமாய் நேற ஹரி
விருதம் செய்து சேருவோம் பின்னால் ௫
அரசனுக்கும் கெர்பணிக்கும் அரும்பாறம் சுமப்பவர்க்கும்
உறசுடன்யுத்தம் செய்வோர்க்கும் ஒருவிருதமில்லை ௬

மெல்லியே நீ சொன்னதெல்லாம் வேறேசாஸ்திரமே யாகும்
தள்ளகூடாதரிவிருதம் தானே செய்குவேன ௭
மந்திருசலத்தில் நீரும் எந்தனுக்கு தந்த வரம் இந்தவேளைதாரு
மய்யா—என்று வேண்டினாள் அ
சொன்னபடி தருவதில் சத்தும் சந்தேகமில்லை
என்னவேணும் உறைப்பாய் நீ இப்போதருவேன் ௯
இன்றைமுதல் மூன்றுதினம் என்னுடனே அன்னமுண்டு
சொன்னத்தைக் கேட்டுக்கலவி செய்யுவீரென்றாள் ௰
பத்தியென்றுயிர் கேட்டாலும் புத்திரன் சிறம்கேட்டாலும்
சத்தில்த்தருவேன் விருதத்தில் சுத்தமாய் உங்கேன் ௰௧

---

### விருத்தம் ௨௯

சொல்லியே வெளியில்வந்தான் சிக்கிரம் மரித்துக்கொண்டாள்
தள்ளியே விடவோர்ஜன் தானுமே அலரிச்சென்றாள்
வல்லவன் தருமாங்கதன் வந்தவள் தன்னைக்கண்டான்
உள்ளது உறையுமென்றான் உருகுவாள் மருகுவாளே.

---

### சாபு கீர்த்தனம்-௰௭-மோகனம்

மைந்தனே கேளாய் தந்தைசெய்த விந்தையைபாராய்
எந்தனுக்குறைத்ததை எண்ணாமல் தடுக்கிறார் மைந்தனே
மந்தாகிரிதன்னில் கண்டார் என்னைமணம்செய்திடு நீஎன்றார்
முந்தி உருதி உறைத்தால் வருவேனென்றேன் மைந்தனே
சந்திரர்சூரியரறிய பின்னும் சகலதேவர்கள்க்குமதெரிய
எந்தன் கறமடித்து இவடம் அழைத்துவந்தார் மைந்தனே
மருவி அந்தப்புறத்திலிருக்க நீ அறைந்த பேரிசப்தம் கேட்க
பிரிந்து எந்தனை வெளி போவென்றுறைக்குகுறார் மை

ஹரிதினம் மூன்றுநாளம்மா போனால் அடையலாம் ராஜனை சும்மா
கறைந்து அழுகவேண்டாம் கருணையோடுவாருமம்மா
அன்னையே வாராய் அந்தப்புறம் அடவுடன்சேராய்
மனுநீதி சாஸ்திரந் தன்னை என்னோடு மைந்தனே அரிந்துபார் முன்னே
மண்ணாளும் ராஜன்க்கு மகத்தான விருதமுண்டோ மைந்தனே
அக்ஷய ஹரிவிருதம் நித்தியம் இதில்மோக்ஷபலம் மொன்றே சத்தியம், பக்ஷமாய் காமியவிருதம் பார்த்திபருக்கில்லை அன்னே
இன்றைக்கு புஜியாமல் போனால் இப்போயிருப்பிடம் செல்லுவேன் தானாய்
அண்டமுனிவர்அறிய உறைத்தது வீணா மைந்தனே கேளாய்

---

விருத்தம் ௰௭

மாதுமோகினியோடுசேர்ந்து மாநாவினிடத்தில்வந்து
காதலும் கொண்ட தந்தை கலக்கமும் தீறத்தானே
ஆதறவுடனிவள்க்கு அரிவாசற மகிமை எல்லாம்
போதனை செய்வா என்றுன் புல்வினாள் சொல்வினாளே.

---

காம்போதி கீர்த்தனம் ௰அ ஆதி

சுந்தரிமோகினி கேளாய் சேர்ந்து நீயும் எங்களோடு
இந்தவிருதம் இருந்திட்டால் ஈடேறிப்போவாய் ௧
ஈடேறவல்லேன் நானம்மா இந்த ராஜனிடத்தினில்
கூடிட வந்தேனனிப்போ கோதையே கேளாய் ௨
கூடி சுகம்புஜிப்பாய் சேள், கூசாமலரசனோடே
நாடிவிருதம் மூன்றுநாளும் நடந்தபின் நீயும் ௩
மாற சாஸ்திரங்கள் தன்னை நேருடன் அறியாயோ நீ
வாரிஜாக்ஷிகாமியர்க்கு வேறே விருதமுண்டோ ௪
மாதர் தருமம் அரியாயோ மன்னவன்மனம் கோணினால்
ஆதாவோடு நல்லகெதி அவர்களுக்குண்டோ ௫
சூரியகுலம் முறைதப்பி சொன்னசொல் பிறண்டான் மன்னன்

நேருடன் சிவி ராஜன்செய்த நேர்மை அரியாயோ கூ
மாதர்மோகம் கொண்டவேளை வாயாலென்ன சொன்னபோது
நீதியாய் ஹரிவாசறம் நிர்க்கக்கூடாது எ

---

விருத்தம் உஅ

அரிவையும் சொல்லக்கேட்டு அடங்காத கோபங்கொண்டு
பரிஜனம் அரியத்தானே பட்டணம் வீதிசென்று
அரசனோடு சபையில்நின்று அலரியே அழுதுகொண்டு
உறைசெய்த படிக்கி அன்னம் உண்ணென்றாள் கலவி என்னோடு
பண்ணென்றாளே.

---

கீர்த்தனம் யகூ ஆதி காம்போதி

வாரும் மகாராஜனே மருவிடநீரும் மனதிலிறங்கி யிப்போவாரும்
உத்துப்பாரும் என்னைச்சேரும் உகந்து அணைந்திடவே வாரும்
கூரிமந்திரகிரியில் கொடுத்தவரப்படிக்கி, பாருமிப்போ மனதை
தேரித்தெளிந்துகொண்டு சேராவிட்டாலுயிரை சத்தில்விடுவேன்
யானும் (வாரும்)
பண்ணும் விருதம் பாவையே தடுக்கிறாய் வீணே, அடிபெண்ணே
எந்தன் கண்ணே இன்னேறம் பொருத்திடுவாய் பண்
சொன்னத்தை கேட்டு நீயும் சேர்ந்து விருதம் செய்யாட்டால்
முன்னும் பின்னும் பாராமல் சின்னப்படுத்தியுன்னை இன்னேரம்
நகர்விட்டு இப்பவே ஓட்டுவேன்
மாதே நீ தோதகம் செய்யாதே போதும் மனதை யடக்கிகொள்
வாய் (மாதே
சொன்ன சொல் பிறட்டியே யுறைக்குறீர் நன்ன ஒ மன்ன என்ன
பண்ண சூரியகுலம் நீ ரன்ன சொன்ன
முன்னால் சிவிராஜனும் தன்னுடல்அருத்து ஈந்தான், முந்தியுறைத்த
சொல்லைசிந்தையி லெண்ணாமல் தந்தவரனை கேட்டால் தள்ளி
விடுவே னென்றீர் (வாரும்
தந்தவரம் தருகுவேன் தப்பிடேன் நானே அடிமானே எந்தன்
தேனே வேறே எந்தவறமாகில் கேள் தந்தவரம்

எந்தனோடுயிர்கேட்டாலும் மைந்தனோடு சிரங்கேட்டாலும்
சிந்தைதனிந்து தாரோன் இந்த விருதத்தில் உங்கேன்
உந்தன மனம் சகித்தால் இந்தக்ஷணம் தருவேன் (மாதே நீ)

---

விருத்தம்-உகூ

அரசனும் சொல்லக்கேட்டு ஆங்காரமிகவும் கொண்டு
பரிஜனம் அரியத்தானே பாலனோடு சிறசைக்கேட்டாள்
உறைதனை கேட்டு சந்தியாவலியுமே ஓடி வந்தும்
கறைந்துமே அரசன் முன்னே கருகுவாள் மகனை நினைந்துருகு வாளே.

கீர்த்தனம்-உ௰-நீலாம்பூரி-ராகம் ஆதி.

என்ன செய்வேன் மன்னா நீரும் பெண்ணெண்ணெண்ணி இவள்க்கு பண்ணி விட்டீர் சபதம் அய்யோ க
கன்னி வடிவு கொண்டு கண்ணுமுன் வந்து நின்று சின்ன பாலன் சிறசைகேட்டாள் உ
பூமிதன்னை ஆளுவோர் காமன்வசமாகினல் க்ஷேமம் நடக்குமோ என் மன்னா ௩
உத்தமி உன்சொல்லை சத்தும் கேளா குத்தத்தால் புத்திரன் சிறம் போகுதே பெண்ணே ௪
சொந்த மனைவிசிறம் முந்தி தாறேனீங்காமல் மந்தமதியாய் போனீர் மன்னா ௫
ஓதினபடிக்கி யிந்த பாதகிக்கி குடாட்டால் நீதி தவரிடுமே பெண்ணே ௬
ஆதி நாராயணனே என்னுதன் விருதத்தை நீரும் பாதகமன்றி நிறைவேற்றும் எ

---

விருத்தம்-௩௰

தந்தையோடு தாய்தபிக்க தருமாங்கதன் பணிந்துநின்று
முந்தியே சூரியகுலம் முறமையும் தவரிடாமல்
எந்தனோடு சிறசைக்கொய்து வந்திழைக்கீந்துமிப்போ
அந்தமாய் ஹரி விருதத்தை அடவுடன் நடத்துமென்றான்.

கீர்த்தனம்-௩௧ காம்போதி-ராகம் ஆதி.

மைந்தா எந்தனைப்பார்த்து சிந்தைதுணிந்துரைத்தாய் மனது சகிப்பேனோ யான்—மைந்தா

அந்தகன் பெண்ணுருவாய் வந்துஎன் கண்ணுமுன்னே உந்த னுயிர் பரித்தாள் என்னை வெருத்தாள்—மைந்தா

அந்தமந்தற கிரிதன்னி லிவளைக்கண்டேன் அதிக மையலுங் கொண்டு எந்தவரம் கேட்டாலும் தந்திடுவே னென்றேன்

மந்தமதியால்ச் சொன்னேன் உந்தனுயிர்போகுதே எந்தவிதந் தாளுவேன் எப்போ மீளுவேன்—மைந்தா

சூரியகுல முறைமை சத்தும்பிசகிடாமல் துணிந்து எந்தன் சிற த்தை வீரியத்துடன் வெட்டி வேகமாய் குடுங்காணும்

பாரில்ப்பிறந்திடாமல் பரமபதம்தனிலே சேருவீர் ஹரி பாதம் திரும்பீர்போதம் எந்தனைப்பார்த்து நீரும்

யேனையா தபிக்குறீர் இறங்கிமனது யிப்போ (எந்தனைபார்த்து)

மைந்தா உந்தனைபார்த்தால் மகத்தான விருதம்போகுதே (மனது மிக நோகுதே)

தந்தவா மிவள்க்கு தவரிடும்படியாகுதே சந்திரர் சூரியர் தறணியிலுள்ள மட்டும்

இந்தகுலம் நசிக்கும் ஜகம் நகைக்கும் மைந்தா

தோலும் எலும்பால் ரெத்தம் தொடர்ந்து பண்ணியதேகம் துர் கெந்தமலபூர்தம்

பாலகனென்றே நீர் பறதபித்தழுகுறீர் காலன் கையில் சிக்காமல்

கோபாலன் விருதத்துக் கீந்தால் மேலாம் பதம்சேரலாம் கெதி பெறலாம் எந்தனை

---

விருத்தம்-௩௧

மைந்தனுமுறைக்கும் போது மனம் துணிந்தாசனப்போ
அந்தமாய்க் கத்திகொண்டு அருவையைப் பார்த்துச்சொல்வான்
சிந்தையும் துணிவாயானுல் சிருவன்சிறம் தாரோனென்றான்
முந்தாணி கோலிக்கொண்டு மோகினி எதிரே நின்றாள்.

விருத்தம்-௩உ

பாலனை கைப்பிடித்து பார்த்திபன் நிற்கக்கண்டு
மேலைகள் சோற சந்தியாவலியுமே அருகில் வந்து
காலனே தந்தைதாயார் கண்மணி உனக்கேயென்று
ஓலமிட்டழுது வாயால்உன்னினாள்அரியைதுதி பண்ணினாளே.

கீர்த்தனம்-உஉ-சங்காபறணம் சாபு.

அய்யனே ஹரிஹரி மெய்யா பாலன் சிறசை கொய்யவும் துணிந்தான் மன்னன்
வய்யமளந்தவனே வந்து யிந்தவேளையில் செய்யும்விருதங்களுக்கு தீங்குவாராமல் காப்பாய்
தையல்க்கு சொன்ன மொழியும் தவறாவல் பைய்யன் சிறசையும் பரிந்து கொய்யாமல்
கையில்சங்கோடு சக்கறமேந்தியே ஒய்யாரத்தோடு நீர் உகந்து வருவீர்—அய்யனே.

கத்திஎடுத்து ராஜன் கடுகிமுன் நின்றுவிட்டான்
புத்திரனுடலாசை சத்துமில்லாமல் விட்டான்
சத்துருமடியேந்தி தானெதிர் நின்றுவிட்டாள்
இத்தருணம் வாராட்டால் எவர்கள் ரெக்ஷிப்பாரய்யா
பத்திபிரகலாதன் தன்னைகாத்தாய் கத்தும்கரியின் கலியைதீர்த்தாய்
வைத்து கிருபை எந்தன்மீதி லுகந்துசத்தில் வாராட்டால்
சிருவன் சிரம்போகும். அய்யனே.

சத்துரு பாவத்தால் கமுசாதியர் கெதிபெத்தார் மித்திராய் பாண்டவாதி வேண்டியபலம் பெத்தார்
மெத்தகாமத்தால் கோபியர்கள் சுகமுத்தார் பத்திபக்த்தியால் விதுராதியர் முக்த்தி பெத்தார்
அண்டகோடியே உண்டிடும்வாயில் கண்டுசோதை களிக்கவே செய்தாய்
மிண்டுபண்ணிடும் மோகினிமனம் இன்று களித்திட எதிரில் வருவாய் அய்யனே.

விருத்தம்-௩௩

அன்னையும் அழுகும்போது அறிவுள்ள தருமாங்கதன்
என்னையும் பார்த்து நீங்கள் ஏங்கிட வேண்டாமம்மா
பண்ணியே அரிநாமத்தை பக்தியோடு துதித்தீரானால்
உன்னித வடிவோடு வந்து உகந்திடச் செய்வானென்றான்.

கீர்த்தனம்-உ௩-பிலஹரி ஆதி.

நாமத்தை உறைக்கத்தருண அன்னையே கேளாய்
பிறேமையுடன் ஹரிவந்து தாமரைப் பாதத்தில்ச்சேர்ப்பார்
நாமத்தை.

பூமியாளும் சுகமெல்லாம் காமியம் நசுவரம் அம்மா
சாமிதிருநாம மொன்றே க்ஷேமத்தை கொடுக்குமம்மா
வாமனர் நாரதர் சுகர் நேமத்துடனே பஜித்து
தாமோதிரன் பக்த்தாக தாமே சஞ்சரிக்கின்றார்' பார் நாம.

சத்தியமுள்ள பாண்டவர் பக்த்தியுமுடைய திருவர்
உத்தமகுண விதுரர் பத்தினிபாஞ்சாலி முதல்
சுத்தமத்த நாமம்சொல்லி இத்தறையில் சுகம்பெத்து
வைத்து ஹரிமேலேஆசை நித்திய வைகுந்தத்தைச் சேர்ந்தார்.
(நாம)

பெத்திடும் தாயேஎனக்கு ஒத்தவள்நீ ஆவாயாகில்
பத்தி ஹரிபாதத்தில் உன்சித்தத்தை வைத்து துதிப்பாய்
உத்தம கெருடனேரி பத்தினியுடனே வந்து
முக்த்தி பதம்தந்தெனக்கு சித்தமும் மகிழச்செய்வார். (நாம)

விருத்தம்-௩௪

புத்திரனுறைக்கக்கேட்டு சித்தம் ஹரிமீதில் வைத்து
சித்திரப் பிறதிமைபோலே க்ஷணமும் தியானித்து நின்றாள்
கத்தியைஓங்கி ராஜன் கடுகியே சிறசில்போட்டான்
பத்தியே விழுகாத்தாலே சத்தியம் உறைசெய்வானே.

விருத்தம்-௩௫

நித்தியமாய் ஹரிவாசறம் நேமமா யிருந்தேனானால்
சத்தியம் தவரிடாமல் தறணியை ஆண்டேனானால்
வெத்தியும் கொண்டகத்தி வீணாக போகாமல்த்தான்
புத்திரன்சிறங் கொய்யென்று பேசினான் கத்திதனை வீசினானே.

கீர்த்தனம்-௨௰௪ எதுகுலகாம்போதி ராகம் ஆதி.

மன்னவனுரைக்கக்கேட்டு மாதுபயந்து கண்ணுமுன் அரிவாவே
பண்ணினாள் துதி ௧
நாராயணா நாரசிம்மாநாகசயனாநஞ்சாவின்மீதிலேநடித்தபூரணா ௨
கோவிந்தா அரே கோபாலா கோகுலவாஸா கோபியர்கள் நேசா
கோவர்த்தனுந்தாரா ௩
சரணமென்ற பார்த்தனுக்கு சாரத்தியம் செய்தீர் கருணையோடு
பாஞ்சாலிமனம் கட்டியே காத்தீர் ௪
சின்ன திருவர்தவம் கண்டு கண்ணுமுன் வந்து உன்னிதபதத்தில்
வைத்தீர் அன்னைமகிழ ௫
பாதகி மோகினி யொருபாவைபோல்வந்து நாதன்செய்யும் விரு
தந் தன்னை நாடிதடுத்தாள் ௬
கேசவா முகுந்தா விசாலநயனா மோசம்வராமலே வந்துமுன்னே
கார்த்திடும் ௭

---

விருத்தம்-௩௬

உறைத்துடன் வாராத்தாலே உத்தமி மனதுவாடி
கருத்தை ஹரி மீதில்வைத்து கறங்களைகுவித்து நின்று
வருத்தமும் மிகவும்கொண்டு வடித்துமே கண்ணீர் சோற
தரித்தகை ஆழியானே தானெதிர் வாதுதித்தாள்.

---

கீர்த்தனம்-௨௫ பந்தவாளி யேகதாளம்

கேசவா அரேமுகுந்தா எதிரில்வாரும் (சிருவன்சிறசை)
வீசும் கத்தியால் மோசம் வாரமல் காரும். ௧
உந்தனை கெதியென்ற பிரகலாதன்தன்னை (பெந்தம் விலக்கி)
சொந்த பக்தனோடு சேர்த்து ரெக்ஷித்தாய் முன்னே ௨
அடைக்கல மென்று அடைந்தேனானுன்னை முன்னே (மைந்தன்
சிறசை) தடுக்கவேணும் இவ்வேளையில் வந்துசொன்னேன் ௩
திக்கு வேறேயில்லை கார்த்திடும் என்னை (இந்தவேளை)
சக்கற மேந்திகையோடு வாராய் என்முன்னே ௪
நீலவருணா விசால நயனத்தால்ப் பாரும் (கருணையோடு)
பாலனுயிர் போகாமலே வந்திப்போ காரும். ௫

விருத்தம்-௩எ

பாவையும் துதிக்கும் போது பரமபதம் தனிலிருந்து
ஆவலோடு கெருடனேறி ஹறநயன் தேவர்சூழ
மேவியே வீசும்கத்தி வேகமாய் மரித்துக்கொண்டு
பூவையர் அரசன்காண பொருந்தியே கெகனம் நின்றார்.

விருத்த-௩அ

மரித்திட கத்திதன்னை மன்னவன் உயரப்பார்த்தான்
கரியுட கலியைதீர்த்த கருணையாம் கடலைக்கண்டான்
வருத்தமும்மறந்துநின்றுமைந்தனோடுபணிந்துமப்போ
கறத்தையும் குவித்துக்கொண்டு கன்னினுன் ஹரியை
பண்ணினு

---

கிர்த்தனம்-உசு செஞ்சுருட்டி யேகதாளம்.

கோவிந்தா அறே கோவிந்தா கிருஷ்ணு கோபாலா ஸ்ரீகோப
கோவிந்தா அறேகோவிந்தா கிருஷ்ணுகோபாலா ஸ்ரீகோபா
வந்தனம் மென்று போத்தினேனய்யா உந்தன் பாதார விந்தத்
மைந்தனுயிர் போகாமலே இப்போ வந்துகார்த்த தயாநிதே
இந்த மோகினிக்கெந்தன் வாக்காலுறைத்த சொல் தவறுமலே
மைந்தன்சிறசைதந்துநா னிப்போ உந்தன் விருதத்தை செ
வேன்
நீதி யானும் தவரிடாசத்தியம் நிலைக்கவே இப்போ செய்கு
நாதனேஉந்தன் பாதந்தன்னை நான்நாடிடும்படி செய்குவாய்
மைந்தன் வந்தரிபாதந் தன்னிலே வந்தனம் செய்து போத்தி
எந்தன் சிறசை மோகினிக்கிப்போ ஈந்திடுமென்று கத்திஞன் ரு
அந்தவேளை சந்தியாவலிவந்து அரியோடு பாதத்தில் போத்தினுள்
முந்தி சூரியகுலமுறை தவறுமல் காறொன்று யேத்தினுள் சு
ஹரிஅறன் அயன்தேவர்கள் கண்டு அவர்களைக்கொண்டாடினுர்
நெறிதவறிடா ராஜனைப்பார்த்து நேரவே ஹரிகூறினுர் எ

விருத்தம்-௩௯

உகந்திட்டோம் உங்களுட உத்தம பக்திக்கிப்போ
தகைத்திட்டோம் மோகினிக்கி தருகவும் வேண்டாம் மைந்தன்
பகர்ந்திட்டோம் உங்களுக்கு பரமபதம் காணிஎன்று
மகிழ்ந்துமே சொல்லக்கேட்டு மருகுவாள் மோகினியும் உருகு
வாளே.

கீர்த்தனம்—உஎ-ஆனந்தபைரவி ஆதி.

அரியே இப்படி சொல்லலாகுமோ அரசனெனக்கு அரிய
வுறைத்த சபதம் போகுமோ
கரியுடன் கலிதீர்த்தநாதனே கருணையோடிந்த பெண்ணுக்
கெறங்கும் அரியே.
அரவிந்தமலர்தன்னி லுதித்தோன் அதிகவடிவோடு சிருஷ்டித்
தெந்தனை, பரிவுடனிந்தஅரசனிடத்தில் பரிந்து சுகத்தை புஜிஎன்
றுரைத்தார்
சொன்னசொல்த் தவரிடாதே அரசன் சின்னபாலன் சிறம் கொ
ய்திடும் வேளையில்
உன்னிதகெருடன் மீதிலேறி வந்து பன்னகசயனு உன்பாதம்
அவர்க்கென்றாய் அரி.
இந்தவேதன் இரக்கமில்லாமலே அந்தமாய் சிருஷ்ட்டித்தாசனிடம்
விட்டான்
சொந்த மனைவியோடுந்தன்பாதம் சேர்ந்தால் எந்தனுக்கென்ன
கெதியுறைப்பா யிப்போ( )

---

விருத்தம்-சய

சத்தியம் தவரிடாத தருமாங்கதன் ஹரியைப்பார்த்து
உத்தமி மோகினிக்கி உகந்து கெதி சொல்லுமென்றான்—என்
சித்தமுதல் இந்திரியங்கள் உம்ம திருவடிதன்னை விட்டு
பத்துதல் அத்திடாமல் பண்ணென்றான்நீரோ என்கண்ணென்
றானே.

---

கிர்த்தம்-உகூ பூபாளம்-ராகம் சாப்பு.

பத்தினியுடன் ருக்குமாங்கதன்அரிபாதம்பத்திப்பணிந்துநின்றான்
சத்தியம் தவறாமல்தான் விருதம் நிறைவேற தறவேணும் வரனை
என்றான் க
உத்தமனே உந்தன் பேனாயுறைத்தோர்க்கு ஒத்திடும் விருதம்
பாரென்றார்
புத்திரனிடம்அரசுவைத்துவைகுந்தம்பின்னாக வருவாயென்றார் உ
சத்தியம் தவரிடா தருமாங்கதன் வந்து தான்பின்னே வருவே
னென்றான்
சத்துகாலம்அரசுசெய்து நீ பின்னேபத்தினியுடன்வாவென்றார் ௩

தேவகாரியத்துக்கு சிருஷ்ட்டித்தோம் உந்தனையும் தெரியாமல் திரிவா யென்றார்
பாவித்த துவாதெசி தூங்குவோர் பலத்தினில் பதினாரில் உனக் கென்றென்றார் ( )
துந்துபிமுதல் வாத்தியம் அந்தரத்தில் முழங்க கெந்தருவர் மலர் தூவவே
இந்திறையுடன் கூட முந்திதேவர்கள் சூழ வந்தார் வைகுந்தந் தன்னில் ( )

விருத்தம்-சஉ

அரசனே டரியுமப்போ அடைந்திட்டார் வைகுந்தத்தை
தெரிசனம் செய்து தேவர் சீக்கிறம் உலகம்சென்றார்
வரிசையோ டுகந்தோர் கேட்டோர் வைகுந்தம் சேர்வா ரென்று
உறைசெய்த சூதர்தன்னை உகந்திட்டார் ரிஷிகளப்போ.

---

மங்களம்.

கிர்த்தனம்-நுயஆசாவேரி ராகம் ஆதி

சக்கர அஸ்தருக்கு ஜயமங்களம் ஸ்ரீருக்குமணி மனோஹரருக்கு சுபமங்களம்
இக்குவலயத்துள்ளோர் மெய்க்கவே விருதமிருந்த ருக்குமாங் கதனைத்தன் பக்கத்தில்ச் சேர்த்தவருக்கு (சக்கா)
சுந்தரி மோகினி தன்னை மந்தற கிரியில் கண்டு
அந்தமாய் வரங்களீந்து அழைத்தவளைக் கொணர்ந்து
சொந்த மைந்தன் சிறசையும் சிந்தை துணிந்தருக்கும் போது
அந்தரத்தில் வந்து கார்த்த இந்திரா மணருக்கு சக்கா
பக்தபரி பாலருக்கு பார்வதி சகோதரர்க்கு
சத்தியம் தவறுதோரை புத்திரன்போல் கார்த்தவர்க்கு
சத்துவகுணத் தோர்சொல்லும் உத்தம சரித்திருக்கு
வைத்துகிருபை எந்தன்மீதில் விசாலமாம் கண்ணால் பார்த்தோர்க்கு மங்களம்

---

ருக்குமாங்தகர் சரித்திரம்
முற்றிற்று.